583

583-587

3.52

OFFICE OF THE REGISTRAR ... 4 SEP 1952 MADRAS

பதிவு எண் — ௵. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, ஆடி; 1—8—52. தளிர் 44

குருகுலத்தின் குறிக்கோள் :

*பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது*

## பொது நல் வாழ்வு

தன் செல்வத்தைக் கொண்டு தன் வரையில் 'வல்லாங்கு வாழ்தும் என்னாது' தக்கார் பலர்க்கும் பயன்படும் நிலையில் வாழ்பவரே நல் வாழ்வு வாழ்வாராவார். கடமையுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றினால், செல்வம் தக்க முறையில் செலவிடப்படுதல் காணலாம்.

வாழ்வில் இன்புற்றிருப்போர், தமக்கு முன் புகழோடு வாழ்ந்து மறைந்த முன்னோரை நினைந்து அவர் மறைந்த நாட்களைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்தற்குத் தம் பொருளில் ஒரு பகுதியைச் செலவிடுதல் நல்லது. இவ்வாற்றினால் தம் வாழ்க்கை வழுவாச் சிறப்பில் வளம் பெறுதல் காணலாம்.

கடவுளுணர்ச்சி, வாழ்வில் என்றும் குறைதலாகாது. தெய்வத் திருவருள் வன்மையை நீடு நினைந்து வழி படுதற்கும், கடவுள் நெறியை வளர்த்தற்கும், மெய்யடியாரைப் பொருளுதவி முதலிய வற்றால் புரத்தற்கும் தம் செல்வத்தில் ஒரு பகுதியைச் செலவிடுதல் சிறந்தது.

விருந்தினர் முகங் கோணாமற் புரத்தற் கென்று தம் பொருளில் ஒரு பகுதியும், நல்கூர்ந்த சுற்றத்தைப் புரத்தற் கென்று ஒரு பகுதியும் ஒதுக்குதல் உயர்ந்த பண்பாகும்.

இவைகள் யாவும் நல்லபடி நடை பெறுதற்குத் தம் குடும்ப நிலையுந் தரத்தில் குன்றாமல் இருத்தல் வேண்டும் அதற்கென ஒரு பகுதியை ஒதுக்குதல் முதன்மையாதும். சுவர் இருந்தாலே சித்திரம் எழுத வேண்டும்!

மேற்கூறிய ஐவகையான செலவுகள் போக எஞ்சிய பகுதி நாட்டரசியல் செவ்வனே நடைபெறுதற் காவன கவனித்தற்குப் பயன் படுத்தலாகும். இத் திறத்தில் பகுத்தமைத்து வாழ்ந்த பழந் தமிழர் நெறிகளைப் பின் பற்றுதல் எக் காலத்துக்கும் எந் நாட்டுக்கும் பொது நலம் பயப்பதாகும்.

தென்புலத்தார் தெய்வம்
விருந் (து) ஒக்கல்
தான் என் (று) ஆங் (கு)
ஐம்புலத்தா (று) ஓம்பல் தலை.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற — மறைந்த முன்னோர், கடவுள், விருந்தினர், சுற்றத்தார் தான் என்று சொல்லப்பட்ட; ஐம்புலத்தாறு ஓம்பல் தலை — ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல் வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாகும்.

'விருந்து' என்பது புதுமை ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேல் நின்றது. 'என்ற' என்பது விகாரப்பட்டது. ஆங்கு, அசை நிலை. வாழ்வுக்குச் செல்வத்துள் ஐந்து பகுதிகள் வேண்டும் எனவே ஆட்சிக்கு ஆறிலொரு பகுதியைப் பயன் படுத்தி வாழ்ந்தமை பெறப் பட்டது.

இறந்த முன்னோர், தென் திசைக்கண் ஆவியுலகில் வாழ்வரென்று கருதிய பழைய வழக்கினை ஒட்டித் 'தென்புலத்தார்' என்று கூறினர்.

பண்டைத் தமிழர் வாழ்ந்த செந்நெறி இந்தச் செய்யுள் வாயிலாக விளங்குகின்றது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | நந்தன, ஆடி. | தளிர் |
|---|---|---|
| 4 | 1-8-52 வெள்ளி | 44 |


## சமூகத் தொண்டு

நாடு வளர்ச்சியுற வேண்டும்; நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் பாடுபடும் நம் தலைவர்கள் அனைவரும் ஒருமுகமாக நமது சமூக வாழ்வு சீர்பட வேண்டுமென்று கூறுகின்றனர். சமூகம் என்பது யாது?

மக்கள் தொகுதியே சமூகமாகும். நாடு உயர்நிலையடைய வேண்டுமாயின் சமூகத்தில் உயர்த்தப்படல் வேண்டும். தற்போது சமூகத்தின் நிலை என்ன? கல்வியிலே பிற்பட்டும், சுகாதார நிலையில் தாழ்ந்தும் பொருளாதார நிலையில் மோசமாயும் உள்ளது. ஒழுக்கத்தோடியைந்த உரிமை, புத்திக் கூர்மை, தினசரி செய்திகளைப் பற்றிய முழு அறிவு, கடின பிரச்சினைகளை ஆராயும் சுயபுத்தி, தன்னலமற்ற பொதுநல நோக்கம், எந்நிலையிலும் உண்மையும் நேர்மையும் மேற்கொள்ளல் போன்ற நற்பண்புகள் சமூகத்தில் காண்பதற்கும் அரிதாய் உள்ளன.

எங்கும் போட்டி, சுரண்டல், பொறாமை காணப்படுகின்றன. போற்றத்தக்க உலக அமைப்பை எதிர்காலத்தில் நிலைநிறுத்த விரும்பும் அனைவரும் மிருகத் தன்மையில் ஆழ்ந்து கிடக்கும் மனிதனை உயர்த்தி, அவன் இருதயத்தைத் தூய்மை செய்து மனிதத் தன்மையும் வளரச் செய்வது அவசியம். இதற்கு ஆவன செய்தலே "சமூகசேவை" ஆகும். தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கும், தேவைப்பட்டவர்களுக்கும் நம்மாலான பணி புரிந்து அவர்களின் நிலையை உயர்த்தப் பாடுபடுதலே சிறந்த சேவை.

மக்களது ஒழுக்கம் சரியான நிலையில் இருக்க வேண்டுமானால் அது இளமையிலேயே பழக்கப்பட வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? வயது வந்தோரிடை நிலவும் தீய பண்புகளைக் களைவதைவிட, நம்மை நற்பண்புகளில் பழக்குவதே ஏற்ற முறை. நமது உள்ளம் தூய்மையான முறைகளில் பழக்கப்பட்டால் வருங்காலத்தில், நம்மால் ஏற்படும் சமூகம் சீரிய சிறப்பு வாய்ந்ததாகவும், [illegible]ட்டற்ற மகிழ்ச்சி நிறைந்ததாகவும் விளங்கும். ஆகவே [illegible]கம் முன்னேற்றமடைய நம் தொண்டு அவசியமாகிறது.

நற் நன்மைக்காக ஒருவர் மேற்கொள்ளும் தன்னலங் கருதாத உழைப்பே நாட்டிற்காகச் செய்யும் ஒரு பெரிய சேவை (தொண்டு) ஆகும். நம்மை உடல் வன்மை, உள்ள எழுச்சி, ஒழுக்க நேர்மை; உள்ளவர்களாகச் செய்வதும் தங்களை தனி வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும், தமக்குரிய கடமைகளை ஏற்ற முறையில் நிறைவேற்றுபவர்களாகச் செய்வதும் "தொண்டு ஆகும்".

ஒரு நாட்டின் உயர்வுக்கு அந்நாட்டில் வாழும் மக்களின் நற்பழக்கங்களும், தன்னலமற்ற தன்மையும், தியாக உணர்ச்சியுமே காரணமாகும்.

"நன்றிக்கு வித்தாகும்
நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்று வான்புகழ் கொண்ட வள்ளுவர் கூறியதற்கேற்ப, தொண்டு செய்வோர் ஒழுக்கம் நிறைந்தவராயிருத்தல் மிகமுக்கியமானதாகும். இது தவிரத் தொண்டாற்றுவோர் கொள்ள வேண்டிய பல சிறந்த குணங்கள் உண்டு. அவர்கள் தன்னலங் கருதாதவர்களாகவும், ஆடம்பரமும் செருக்கு மற்றவர்களாகவும், நேர்மையும் உண்மையுமான சிரத்தை யுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தொண்டு (சேவை) புரிவதில் குன்றா ஆர்வம் உடையவர்களே சிறந்த தொண்டர்களாகத் திகழ முடியும். உண்மை உழைப்பு இருந்தால் தொண்டில் வெற்றி காணமுடியும். உண்மை உழைப்பால்தான் மற்றவர் உள்ளன்பைப் பெறமுடியும். இடை

யூறு ஏற்படுங் காலத்துத் தம் பொறுமையை இழந்து விட லாகாது.

அன்பு முறையில் ஆகாதது ஒன்றுமில்லை. தொண்டு புரிவோர்க்குத் தக்க அறிவுப் பயிற்சியும் அவசியம். சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டதின் மூலம் மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது. இருப்பினும் இன்றைய நிலை என்ன? குடியாட்சி முடியாட்சி அபேதவாதம், பொதுவுடைமை போன்ற அநேக ஆட்சிகள் தோன்றித் தோன்றி மறைகின்றன. இருப்பினும் மக்கள், உலகில் களங்கமற்ற சுயேச்சை பெற்று வாழ்வதைக் காணோம். ஏன்? தனக்குச் சுயேச்சை வேண்டுமென முறையிட்டுப் போராடும் மனிதன் மற்றவர்க்கு அச் சுயேச்சை கொடுப்பதைப்பற்றி எண்ணுவதே இல்லை.

தலைமுறை தலைமுறையாக மக்கள் சுயேச்சை இல்லாமல் கட்டுப்பாட்டுக் குள்ளாகி ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டுத் தவறான இலட்சியங்களைக் கொண்டு தன்னடக்க மில்லாதவர்களாகவும், சுயேச்சையை வகிக்கத் தகுதி யில்லாதவர்களாகவும், அதை அனுபவிக்க இயலாதவர்களாகவும் தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றார்களென்பது சிந்திக்கத் தக்கது.

கல்வியறிவில்லாத மக்களுக்கு அறிவு புகட்டி அறிவாளிகளாக்குதல், சுகாதார அறிவுகளையூட்டி மக்கள் உடல் நலனைப் பெருக்குதல், மூடநம்பிக்கைகளை யொழித்தல், சமூகத்திலுள்ள மக்கள் நிலையை உயர்த்துதல் போன்ற துறைகளில் வேலை செய்யவேண்டும். சுகாதாரத்தைப் பற்றிய முழுஅறிவும் தொண்டர்களுக்குத் தேவை. முதலுதவி போன்ற பயிற்சிகள் தொண்டர்கள் பெற்றிருப்பது அவசியம்.

சில சிறந்த பண்புகள் :....

(1) பிறரை நேசித்தலும் சமூக சேவை புரிதலும். முதலுதவி பயிற்சி பெறுதல் — சுகாதார பிரசாரத்திலும், தாழ்த்தப் பட்டோரின் முன்னேற்றத்திற்கான ஆக்க வேலைகளிலும் பங்கெடுத்துக் கொள்ளல்.

(2) சமூக வாழ்க்கையை உயர்த்தவும், சிக்கன முறையைக் கையாளவும் பயிலுதல்.

(3) குடும்ப வாழ்க்கையில் வெற்றி பெறல்.

(4) பூரண நல்வாழ்க்கை வாழ்தல்.

(5) இறை வழிபாட்டு உணர்ச்சி பெறுதல்.

தொண்டு நிலையங்கள் சமூகத் தொண்டர்களாக மட்டுமின்றி சமூகத்தில் சிறந்த தலைவர்களாகவும் விளங்கத் தக்க வசதியளிக்கின்றன. தன்னலப் பற்று நீங்கி மற்றவர்களுக்காக உழைத்தல் என்னும் பெருங்குணமும், மற்றவர்களுடைய கருத்துக்கும் இடமளிக்கும். சிறந்த குணமும் பெற சமூகத் தொண்டு நிலையம் உதவும் ஆகலின் இது போன்ற தொண்டு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். இதைப் போன்ற நிலையங்களைச் சிறப்புற நடத்தினால் எல்லோரையும் நற்குடி மக்களாக மாற்றிவிடலாம். பல சிறந்த தலைவர்கள் நம் நாட்டில் தோன்றுவர். உலகில் நம் நாட்டு நிலை உயரும். அதற்கு ஆவன நாமும் நம்மாலியன்றவரை செய்வோமாக.

—வே. கிருஷ்ணமூர்த்தி.

---


# குருகுல வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

10. ஆத்திசூடி – கருத்துரை
விலை 0-0-3.

**கிடைக்கும் இடம்:**

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P. O., (S.I.R.)

# * தோழியின் திறம் *

(சி. து. க.)

பண்டைத் தமிழர் செல்வங்களாகிய சங்க இலக்கியங்களில் அகத்துறை தொடர்பான நூல்களை ஆழ்ந்து பயில்வார்க்கு, அவைகளில் புலனெறி வழக்காகப் புனைந்து கையாளப்படும் உறுப்பினர்களுள் தோழியே சிறப்புடையாளாகக் காணப் படும். புலவரால் புனைந்து காட்டப் பெறும் தோழி, குறிப்புணர்தல், கருத்தாழம் தெளிதல், நிலைமைக் கேற்றபடி உரையாடல், தன் பேச்சால் தலைமக்களை மடக்கித் தன்வழிக்குக் கொணர்தல் ஆகிய நுட்ப வினைத்திறங்களில் மிக்கவளாக இருத்தலைக் காண்கிறோம்.

தலைமக்களின் காதலொழுக்கம் அறிவு மிக்க பாங்கியின் துணை கொண்டே வளர்கின்றது. தன் நுட்ப அறிவினால் தலைவன் தலைவியர் போக்குகள் பலவற்றையும் நுனித்தறிந்து, தான் அவர்கள் தொடர்பாகச் செய்ய வேண்டிய செயல்களைத் திறமையாக வகுத்துக் கொண்டு அவைகளைச் சிறிதும் வழுவா முறையில் தோழி செயலாற்றுகின்றாள். உள்ளம், உடல், உணர்வு, மொழி ஆகிய அனைத்தையும் தலைவியின் நலத்துக்காகப் பயன் படுத்தலே தோழிக்குரிய நல் விலணக்கமாகத் திகழ்கின்றது.

உருவுந் திருவும் பருவமும் குணனும் கல்வியும் ஒழுக்கமும் தமக்குள் ஒத்தவரான தலைவன் தலைவியரிடையில், நல்லூழ் தொடர்பாகக் காதல் பிறந்து வளரும். அவ் வளர்ச்சிக் குரிய உதவிகள் யாவும் தோழி, காலமும் களனும் ஆராய்ந்து செய்வாள். காதல் மிகுதியால் தலைவன் களவுப் பண்பிலே தலைவியின் தொடர்பை விரும்பிக் காலங்கடத்துதல் இயல்பு. நாட்டியல்புக் கேற்பத் தலைவன் தலைவியர் திருமணம் புரிந்து கொண்டு இல்லறப்பணியில் ஈடுபடாது, இத்தகைய களவுப் போக்கில் ஒழுகுவது அவர்கள் பிற்கால வாழ்வுக்குத் தீமை தருவதாகும் என்பதைப் பாங்கி நன்கு உணர்வாள். மற்றும் அவர்கள் எவ்வளவு விரைவில் கணவன் மனைவியராகிப் புகழார்ந்த இல்வாழ்க்கையில் ஈடுபடுகிறார்களோ அவ்வளவு விரைவாக ஊர் மக்கள் வீண் வம்புப் பேச்சுகளும் ஒழியும் என்பதனையும் அறிவாள். தலைவனுக்கு எப்படியாவது தலைவியை வரைந்து கொண்டு அமைந்த இல்லற வாழ்க்கையைத் தொடங்குவதன் முதன்மையை விளக்கியாகவேண்டும் என்ற கட்டாயம் அவள் உள்ளத்தைத் தூண்டுகின்றது.

ஆனால், பாலும் சுவையும் போல உள்ளம் கலந்த களவுக் காதலில், உலகத்தையும் கடமையுணர்ச்சியையும் மறந்து இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் அக் காதலர்க்குத் தன் கருத்தைத எவ்வாறு விளக்குவது? இந் நிலையில் பாங்கி கையாளும் நுட்பமான அறிவுரைகளும் உரையாடல்களும் சங்க இலக்கியங்களில் மிகத் தெளிவாக விளங்குகின்றன. அவ் விளக்கங்களில் ஒன்றிரண்டை மட்டும் இவண் சுவைக்கலாம்.

தலைவன், தன் காதல் காரணமாக நள்ளிரவென்றும் பாராமல் வழி நெடுக வாழும் கடும்புலி முதலிய விலங்கினங்களுக்கும் அஞ்சாமல் வருவது வழக்கம். தலைவன் வரவு தலைவிக்கு மிகவும் இன்பம் ஊட்டுவதாயினும் தன் பொருட்டு அவன் இருளையும் விலங்குகளையும் பொருட் படுத்தாது வருவதால், அவற்கு ஏதேனும் ஏதம் நிகழ்ந்தால் என்ன செய்வது என்று எண்ணும் போது அவ் வின்பம் ஒரு நொடியில் மாறி விடுகின்றது. இந் நிலைமையைத் தோழி நன்கறிவாள். ஆகவே, தலைவனிடம் தலைவியின் உள்ளம் அடையுந் துன்பத்தினை எவ்வாறேனும் விளக்கிவிட வேண்டும் என்று

நஞ்சன் கூடுபல்பொடி
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர் தெரு, :: சென்னை-1

கருதுகின்ருள். தலைவன் வாழும் நாட்டியல்பைக் கொண்டே அவன் உள்ளத்தில் எண்ணம் மிகுமாறு செய்தல் நலமாகும் என்று நினைக்கின்ருள்.

தலைவன் நாட்டில் ஒரு சமையம் தான் கண்ட காட்சி அவள் நினைவிற்கு வருகிறது. ஒரு நாள், தோழி பொழுது போக்காகத் தலைமகனுக்குரிய மலைப் பக்கமாகச் சென்றிருந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவள் உள்ளத்தில் நீங்காமல் நிலைத்து விட்டது. ஆண் குரங்கு ஒன்று தாவிப் பாய்கையில் தவறி வீழ்ந்து இறந்து விட்டது. அதனோடு அன்புடன் வாழ்ந்த பெண் குரங்கு தன் உயிர்த்துணையான கணவன் பிரிவால் மிகவும் துன்புற்றது. வாய்விட்டுக் கதறி அழுதது இறந்து போன தன் கணவன் உடலிற் புரண்டழுதது. தன் ஒரே குட்டி தன் வருத்தத்தை யுணராமல் தடுமாற்றமின்றி விளையாடிக்கொண்டிருந்த காட்சியைக் கண்டு தந்தையற்ற அதன் நிலையை எண்ணி மிக வருத்தமுற்றது போல் அதனை பார்புற அணைத்துக் கதறி அழுதது. தன் நிலைமையை அமைதியாகச் சிந்திப்பதுபோல் சிறிது நேரம் அழுகை ஓய்ந்திருந்தது. பிறகு தன் கைம்மை நிலைமையை எண்ணி மிகவும் அவலமுற்றுத் தான் இறந்து படுதலே, சிறந்த நிம்மதியாகும் என்ற முடிவுக்கு வந்தது போல் தன் குட்டியுடன் அப்பால் சென்றது. அருகில் இந் நிலைமையைப் பார்த்துக் கொண்டு இருந்த தன் சுற்றத்திடம் தன் குட்டியை அடைக்கலமாகத் தந்து மிக வேகமாகப் பாய்ந்தோடி, ஓங்கிய மலைச் சிகரத்தை யடைந்தது. அங்கிருந்து தாவி வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டது. தன் ஒரே குட்டி இன்னும் தன் குலத்துக்குரிய குதித்தல் பாய்தல் ஆகிய செயல்களைக் கல்லாதிருக்கும் நிலையையும் தானும் இறந்துவிட்டால் அது பிழைக்க வகையறியாமல் துன்புறுமே என்ற எண்ணமும் அக் குரங்குக்கு உண்டாக வில்லை. தன் உயிர்க் கணவன் இறந்து, தான் மட்டும் உயிர் வாழும் துன்புத்தையே பெரிதாக எண்ணி உயிர் விட்டது.

இக் காட்சியைக் கொண்டே தலைவன் உள்ளத்தை மாற்ற முயல்கிருள் தோழி. பெண் குரங்கு பிரிவுக்காற்ருமல் உயிர் விடும் செயல் மிக்க மலை நாட்டுக்குத் தலைவனுக இருத்தலால் தலைவனுக்கு, மகளிர் உயிர்க் காதலரைப் பிரிந்து வாழார் என்ற கருத்து தெரிந்திருக்குமென்று தான் எண்ணியதாகத் தோழி நுட்பமாகத் தலைவனுக்கு உணர்த்துகிருள். தலைவனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் தன் தலைவி உயிர் வாழவே மாட்டாள் என்பதையும், நள்ளிரவில் தம்மை நாடி வருதலை உடனே தவிர்ந்து, நல் வாழ்வில் இருவரும் புகுஞ் செயலாக, உடனே தலைவியை வரைந்து கொள்ளுமாறு குறிப்பாற் புலப்படுத்துகிருள். அறிவு சான்ற தலைவனுக்கு, அக் குறிப்பு மொழிகள் போதுமல்லவா! இதனை,

"கருங்கண் தாக்கலை பெரும்
பிறி (து) உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளை
முதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப்
பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும்
யாமே."

என்னும் குறுந்தொகை யடிகள் நன்கு விளக்குகின்றன. 'வாழி' என்னும் மொழியால், நள்ளிரவில் வழியில் தீங்குறுவதைக் காட்டிலும் நல்லபடி வாழ்ந்து தலைவியை வரைந்துகொண்டு இன்புறுதலே சாலச் சிறந்ததென்று சுட்டியதாக அமைகின்றது.

குறுந்தொகையில் மற்ருேரிடத்திலும் இவ் வரைவின் முதன்மை, தோழி வாயிலாகத் தெரிகின்றது.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

தலைவன் தலைவியோடு களவின்பம் நுகர்ந்து பல நாட்கள் கழித்தான். வரைந்து கொள்ளுமாறு தோழி, குறிப்பாலும் வெளிப்படையாலும் சொல்லியும் ஒன்றும் பயனில்லை. ஊரிலோ அலர் மொழிகள் வெகுவாகப் பரவத் தொடங்கின. தனிமையில் தலைவன் இருள், விலங்குகளுக் கஞ்சாமல் வரும் செயலும் தீங்காக முடியும் என்று தலைவியும் தோழியும் எண்ணி அஞ்சினர். தவறான ஒழுக்க மட்டுமன்றி இக்களவு நெறியைப் பொய்யான தென்றும் தோழி கருதினாள். இங்ஙனம் இருக்கையில், ஒருநாள் தலைவன் தலைவியை நாடி தலைவியின் இருப்பிடத்திற் கருகில் வந்திருந்தான். தலைவன் தன் வீட்டிற் கருகில் வந்திருப்பதையும் தாம் உள்ளிருந்து பேசுவது அவனுக்கு நன்கு கேட்கும் என்பதையும் நன்கறிந்த தோழி, தன் தலைவியிடம் பேசுவதுபோல், தலைவன் கருத்தில் நன்கு பதியும் படியாக, அவன் தலைவியை வரையாது காலங் கடத்துதலின் இழிதகைமையைப் புலப்படுத்தினாள். ஊர் மகளிர் பழி மொழிகள் நாளுக்கு நாள் மிகுதியாகிப் பரவவும் தலைவன் திருமணம் செய்து இல்லறவாழ்வு நடத்த முயலாமல் களவாக வந்து கலந்து செல்லும் பொய்யொழுக்கத்தினை இனியும் பொறுக்க முடியாதென்று உறுதியாகக் கூறினாள்

தலைவன் நடத்திச் செல்லும் பொய்யொழுக்கத்தினைத் தாம் இனி எக்காரணம் பற்றியும் ஏற்றுக் கொள்ளல் இயலாதென்று வன்மையாகக் கூறினாள். ஆனால், தலைவன் வரைந்து கொள்ள முயலாமல் இவண் வாராதொழிந்தால் தலைவியின் நிலைமை என்னாகும் என்பதையும் தோழி புலப்படுத்தினாள். தலைவன் வரவு தாழ்ந்தால், தலைவி உளமும் உடலும் மெலிவடைதல் ஒருதலை என்றும், அப்படி மெலிவுற்றாலும் தாம் தலைவன் போக்குக்கு உடன்படல் ஏலாதென்றும் கூறினாள். பிரிவாற்றாமல் தலைவியின் கைகள் மெலிந்து, கைவளையல்கள் கழன்று வீழுமாயினும், சிறிய அளவான வளையல்கள் பெற்றணிந்து கொள்ளல் கூடுமென்று தம் உள்ளத் துறுதியைப் புலப்படுத்தி, தலைவனை நிலையான இல்வாழ்வில் ஈடுபடத் தூண்டும் தோழியின் ஆற்றல் மிக்க மொழிகளை என்னென்பது!

மாரி யாம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறரி யெருத்தின் கதழுந் துறைவன்
வாரா தமையினும் அமைக
சிறியவும் உளவீண்டு விலைஞர் கை
வளையே

—குறு- ௧௧௭

வாராதமையினும் என்பதினுள்ள உம்மையால், தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்தல் தலைவிக்குத் துன்பம் தருவதாகும் என்பது நன்கு புலனாகின்றது. 'ஈரம்பொருந்திய நண்டு, கொக்கின் பார்வைக்கு அஞ்சி விரைந்து வளைக்குள் புகும் செயல் மிக்க கடற்றுறைவன்' என்றது, பகைக்குப் பயந்து ஒளிந்து உயிர்வாழும் நண்டுபோல, மகளிர் பழி மொழிகளுக் கஞ்சிக் கரந்து வருதலும் களவில் இன்பம் துய்த்தலும் முற்றும் மாறித் தலைவியைச் சான்றோர் போற்ற வரைந்து கொண்டு இன்ப வாழ்வு நடத்துதல் சாலச் சிறந்ததென்று தலைவனுக்கு அறிவுறுத்தப் பட்டதாம்.

இத்தகைய அறிவு சான்ற குறிப்புரைகள் தோழி வாயிலாகத் தோன்றி, தலைவன் தலைவியர்க்குப் பெரு நன்மை உண்டாக்குதலைச் சங்க இலக்கியங்களிற் காணலாம். இன்னும் இவைபோல் சங்கநூற் கருத்துக்களை நம் இதழ் வாயிலாக அவ்வப்போது வெளியிடலாம் என்று நினைக்கின்றேன். அறிஞர்க்கு அவை என்றும் சுவை பயக்குமென்ற எண்ணமும் இச் செயலில் என்னைத் தூண்டுகின்றது.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

# திருக்கழுக்குன்றச் சொற்பொழிவுகள்

(முன் தொடர்ச்சி)

திருக்கழுக்குன்றத் திருப்பதிக நூல் வெளியீட்டின் போது,

திரு. கஜபதி நாயகர் அவர்கள் ஆற்றிய உரை:

"மாணிக்கவாசகர் திருநாளை ஒட்டி நம் இங்குச் சேர்ந்திருக்கிறோம். நம்மில் சிலர் செல்வரும் இருக்கின்றனர். செல்வ நிலையாமையை அறிந்து இந்த யாத்திரையை அவர்களும் மேற்கொண்டுள்ளனர். திரு. இளவழகனார் செல்வம் உடையவர் அல்லர். அவர் ஒரு துறவி. அவர் முயற்சியால் நாம் இன்றும் ஒரு நூலைப் பெற்றிருக்கின்றோம்.

துறவிகளின் தொண்டும் இல்லறத்தார் தொண்டும் சேர்ந்து இறைபணி யாகின்றது. அயக்காந்த முள்ளைக் கொண்டு வானிலும் நீரிலும் திசையறிந்து செல்வதைப் போல ஆதிபகவன் அருள் நாட்டங் கொண்டு இவ்வுலகில் பெருங்காரியங்களைச் செய்வோமாக. இறைவன் ஆதியை (சத்தியை) ஒரு பகுதியாக உடையவன், மாணிக்க வாசகர் ஒரு நீத்தார். அவரது மொழி நிறைமொழி. அவர் குணமென்னும் குன்றேற நின்றவர். அவர் அறவோர். நாம் மெய்யுணர்வு பெறவேண்டும். அடியாருடன் பழகுவதால் அதில் நாம் வளர்ச்சி பெறுவோம். இந்நூலைப் பயில்வதால் இவ்வுலகு ஆதிபகவன் முதற்று என்பதை அறிவோம்.

ஆசிரியர் அவர்களின் உரை:

வேதமலைத் தாழ்வரையில் இருப்பதோடு திருவடி இடம் இருக்கின்றோம். இது சிறப்பினும் சிறப்பு. இவ்விடத்தில் மாணிக்கவாசகர் தாம் பெற்ற ஞானத்தை வைத்து விட்டுத் தில்லைக்குச் சென்றார், ஞானம் வைக்கப்பட்ட இடம் இது. தமித்து உண்ணுமை போல மணிவாசகர் திருப்பெருந்துறையில் பெற்ற ஞானத்தை நமக்காக இங்கே வைத்திருக்கின்றார். இது திருக்கழுக்குன்றத்திற்கு அருகிலுள்ள நாம் அனைவரும் பயன் பெறும் படி அமைந்துள்ளது.

இங்கு வந்து விரைவாகப் போய்விடாதபடி உணவும் இங்கேயே கொடுக்கப் படுகிறது. நிழல், நல்ல காற்று, தனிமை, அமைதிகளோடு எல்லாம் வல்ல திருவடியும் இங்கே இருக்கிறது. அவர் வைத்துள்ள திருவடியைப் பெறுவது, அமைதியாய் இருப்பதாகும். இவ்வுண்மையைச் சிறப்புற்ற இடங்கள் பல இருந்தும், இலங்குகின்ற ஆண்டவன் சேவடிகளை எங்கே வைப்பதென்று அறியாமல் கலங்கிய மாணிக்கவாசகருக்குக் 'கலங்க வேண்டாம் இங்கேயே வைத்துவிடு' என்று தெரிவித்து இறைவன் அவர் கலக்கத்தை நீக்கி அமைதியை உண்டாக்கியதைக் கொண்டு அறியலாம். எனவே இவ்விடம் எவ்வளவு சிறப்புடையது! மற்றெல்லாக் கோவில்களைக் காட்டிலும் இது சிறந்தது தான். இது ஒரு நிறைவைத் தருகிறது. இம் மலையைப் போல வேறு எங்கேனும் உண்டா?

இது அளவான நடை உடையது. மிக்க உயரமும் மிக்க தாழ்வும் அற்றதாய் இருக்கிறது. செறிந்தகாடாகவும் வெறும் மண்மேடாகவும் இல்லாமல் ஆங்காங்கே மரங்களையும் கொண்டிருக்கிறது. இவ்வாறே எல்லாவகைகளிலும் அளவாய் இருக்கின்றது. ஞானத்தில் ஞானத்தைப் பெற்ற இவ்விடம் மிகச் சிறந்தது. எனவே எங்கு இருப்பவரும் இங்கு வர வேண்டும். இப்படி பாடுவதைப் பல பெரியோர் தகுதியான தென்று நினைத்துள்ளனர். பிரசாரத்திற்குத் தக்க இயற்கை உண்டு. மூவர் கோவிலும் மாணிக்க வாசகர் கோவிலும் இங்கு உள்ளன..

ஆண்களை விடத் தாய்மார் இங்கு மிகுதியாக வந்திருக்கின்றனர். அவர்கள் தம் அருளுள்ளத்தால் ஆண்களை உயர்த்த வேண்டும். அவர்கள் பெருங் கூட்டமாக வந்திருப்பது, சமயத்திற்கு நேரக்கூடிய வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அடியேன் எதையும் விரும்பிச் செய்வதில்லை. தானாக வருவதை ஏற்றுக் கடைப் பிடிப்பது அடியேனது போக்காய் அமைந்துள்ளது. இராயபுரம் இறைபணிக் கழகத்தில் நிகழ்த்திய திருக்கழுக்குன்றத் திருப்பதிக விரிவுரையை அன்பர் ஆடலரசு பெரும்பாலும் விடாமல் எழுதி இருக்கிறார்.

(தொடரும்)

# நிலவுக்கு - - - -

7

[ நினைவு ]

...ன்பின் உருவே!

வாழ்ந்தால் ஒரு மயிர் நீப்பினும் வாழாக் கவரிமானாக வாழ வேண்டும்.

வாழ்ந்தால் கணைக்காலிரும்பொறையாக வாழவேண்டும். ஒற்றுமைக் குறைவு காரணமாகக் கணைக்காலிரும்பொறைக்கும் செங்கணானுக்கும் போர் மூண்டது. இருவரும் தமிழர். இருவரும் வீரர்.

சூழ்நிலையின் காரணமாக வெற்றி செங்கணானை நாட, அதனால் அவன், கணைக்காலிரும்பொறையைச் சிறையிலே போடவும், அங்கு அவன் மனம் வெதும்பி வாடவுமான நிலை ஏற்பட்டது. இருந்தும் இயற்கை கூடவா அவனைக் கைவிட்டுவிடும்.

உணர்ச்சி, கைதி என்றும் பார்ப்பதில்லை காவலன் என்றும் கவனிப்பதில்லை. பொது நோக்கோடு உண்டாகும். தன்னையறியாமல் தண்ணீர் வேட்கை உண்டாகியது அந்த சிறைவாழ் மன்னனுக்கு. காவலனை விளித்தான். தண்ணீர் கேட்டான்.

சொந்த இடமாய் இருந்தால் கேட்டவுடன் வகை வகையான பானங்கள் பருகுவதற்கு வந்திருக்கும். ஆனால் வந்த விடத்தில், அதுவும் இந்த இடத்தில், சிறைக் காவலன் கூட இவனை மதிக்கவில்லை. நேரங் கழித்துத் தண்ணீர் கொண்டுவந்தான்.

தன்மானமுள்ள மன்னன் மானமிழந்தவன் உயிர் வாழ இசையவில்லை, கொண்டுவந்த தண்ணீரையும் குடிக்கவில்லை பட்டினி கிடந்தான். முடிவில் இறந்தான்.

தன் இனத்தைப் பழித்தனர்; அது தன்னைப் பழித்தது போல. தன் மொழியைப் பழித்தனர்; தாயைப் பழித்தது போல. தன் நாட்டைப் பழித்தனர்; தன் வீரத்தைப் பழித்தது போல என எண்ணினான் சேரன் செங்குட்டுவன். தன் நாட்டை, கலையை, மொழியை இரு ஆரிய மன்னர்கள்-கனகன். விசயன்-என்பவர் பழித்தனர் என்பதைக் கேட்டு ஆண்மையோடு சென்றான்; அவர்களை வெற்றி கொண்டான். வாழ்ந்தால் இந்த மனிதனைப் போன்று மானமுடன் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும்.

வாழ்ந்தால் "உதவி செய்வதையே தம் பதவி" என்று எண்ணி வாழ்ந்த மணிமேகலையாக வாழ வேண்டும்.

நாகரிகம் என்னும் பெயரால், கலை என்ற பெயரால், கண்ட வாலிபர்களுடன் மாலை வேளையில், கடற் கரையில் காலங் கழிப்பதை நான் வெறுக்கிறேன்.

தேன் மொழியைப் பற்றித் தான் கூறுகிறேன். அவள் செய்கை எனக்குப் பிடிக்கவில்லை. அவள் குடும்பம் மிகவும் மதிப்புள்ள குடும்பம். அதை நான் நன்கு அறிவேன்.

மாணவி என்ற முறையில் ஒரு மாணவனுடன் பழகலாம்-குறிப்பிட்ட இடங்களில், ஆனால் காற்று வாங்கச் செல்வது, கடற்கரையோரத்தில் தனியாகப் பொழுது போக்குவது எப்பவைகளை நான் வெறுக்கிறேன்.

நல்ல மரத்திலே புல்லுருவி போல், விருந்தினிடையே வேப்பு போல், கற்றவர்கள் முன்னிலையிலே ஒரு கல்லாதவன் போல, படித்துப் பட்டம் பெற்ற ஒரு குடும்பத்தினிடையே, பகுத்தறிவையே தன் குடும்பத்தின் கேடயமாகக் கொண்டுள்ள ஒரு குடும்பத்தினிடையே, இந்தத் தேன்மொழி-தன் மானத்தைக் காற்றிலே பறக்கவிடும் தேன் மொழி- வந்து பிறந்திருப்பதைக் காண என் மனம் துன்பம் அடைகிறது.

"நெஞ்சு பொறுக்குதில்லையே" என்று ஒரு கவி உலகத்தில் இருக்கும் "துன்பங்களைக் கொடுக்கும்" செயல்களைப் பார்த்துப் பாடினான். என் கற்பனை மனதில் தேன் மொழி போன்றாரின் செய்கையைப் பார்த்தே அவ் வரியைப் பாடினார் என்று தோன்றுகின்றது.

என் உள்ள உணர்ச்சியைப் பிறரிடம் சொல்லுதல்தான் மனவமைதி சிறிதாவது உண்டாகும் என நினைத்தேன். என் உள்ளத்தின் நினைவுதான் இக் கடிதம்—

இப்படிக்கு

உன் கடிதத்தை எதிர் நோக்கும்.

இளநகை.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி.சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ.)